# பொதுக்காலம் 13ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைவனையே முழுமையாய் நேசிக்கவும், இறைவனுக்காக சிலுவையைச் சுமக்கவும், அழைப்பு விடுக்கிறது இன்றைய ஞாயிறு திருப்பலி. இயேசுவின் சீடர்களுக்கு மட்டும் சிலுவைகள் சுமத்த அறிவுறுத்தப்படவில்லை, இவ்வுலக வாழ்வில் அனைவருக்கும்தான். இறைவாக்கினர்களை இயேசுவின் சாயலாய் உணர்ந்து, அவர்களுக்கு ஒரு கிண்ணம் நீர் தருவோர், கைம்மாறு பெறாமல் போகார் என்கிறார் இயேசு.

இன்றைய முதல் வாசகத்தில், இறைவாக்கினர் எலிசாவுக்கு சூனேம் பெண்ணின் பணிவிடையும், அதற்கு அப்பெண் பெற்ற கைம்மாறும் பற்றி அரசர்கள் இரண்டாம் நூல் எடுத்துரைக்கிறது. இறையடியார் என உணர்ந்து எலிசாவுக்கு, உணவும் ஓய்வெடுக்க அறையும் ஏற்பாடு செய்து தன் உடல் உழைப்பை உள்ளன்போடு செய்தாள். அவளுக்கு பேறுபெற்ற மக்கள் செல்வத்தை இறைவன் பரிசளிக்கிறார். இதுவே இறைவனின் அன்பு.

இன்றைய நற்செய்தியிலும் இறை இயேசுவின் சீடர்களுக்கு நாம் செய்ய வேண்டிய மரியாதையும் அதற்கான பங்களிப்பையும் பற்றி மத்தேயு நற்செய்தி எடுத்துரைக்கிறது. அனைத்தையும் விட இறைவனுக்கு முதலிடம் தருவதை நம் முதற்கண் கொள்ள வேண்டும். இறைவனையே அதிகமாய் அன்பு செய்ய வேண்டும். அன்பின் பாதையில் சிலுவைகள் எதிர்படவே செய்யும். சத்தமின்றி சிலுவையைச் சுமந்து இறைபதம் முத்தி செய்வோம். இறைப்பணி செய்வதே முதன்மையாக கொண்டவர்களை மதிப்போம். நேர்மையை நமக்குள் சுமப்போம். சமூகத்தில் வெளிப்படுத்துவோம். இறைவனின் பணியைச் செயல்படுத்துவதில் இணைத்துக் கொள்வோம். இப்பலியில் இணைவோம்.

### இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இறைவாக்கினர்களை ஏற்றுக்கொள்ள அறிவுறுத்தியவரே எம் இறைவா!

திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, பணியாளர்கள் நற்செய்திப் பணியை முதன்மையாகக் கொள்ளவும், நேர்மையாய், உள்ளன்போடு மக்களோடு தம்மை இணைத்து, எளிய வாழ்வை மேற்கொண்டு, அதன் மூலம் நற்செய்தியைச் செயல்படுத்தவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நேர்மைக்கு கைம்மாறு தருபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளுவோர் நீதியின் பாதையில் நேர்மையான ஆட்சி செய்யவும், மக்கள் நலனை மட்டும் கருத்தில் கொண்டு செயல்படவும், பிரிவினை வாதத்தை தூண்டாமல், பொருளாதாரத்தில் கவனம் செலுத்தி, நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல நல்லறிவு தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னையே ஏற்றுக்கொள்கிறார் என்றவரே எம் இறைவா!

எங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் அன்பின் தேவையிலுள்ளோர், பொருளாதாரத் தேவையிலுள்ளோர் மற்றும் உடல்நலக் குறைவால் வாடுவோர் அனைவரையும் அன்போடு ஏற்றுக் கொள்ளும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வரம் தருபவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய மழைப் பொழிவு ஏற்படவும், நீர்நிலைகள் நிறைந்து வேளாண்மை சிறக்கவும், குடும்ப மகிழ்ச்சி, அமைதி பெருகி, சமூக பொருளாதாரம் ஏற்றம் பெற்று, இயல்பு வாழ்வு திரும்பவும், மாணவர்களின் எதிர்காலம் சிறக்கவும், உள்ளத்தின் வேண்டுதல்கள் நிறைவேறவும் வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com